# செய்திக்கலவை

தமிழ்மாத இதழ்

# SEITHI KALAVAI

TAMIL MAGAZINE

ஜனவரி 2024 செய்தி : 09 கலவை : 11 விலை ரூ : 15/- வருட சந்தா ரூ : 180/-

January 2024 Issue : 09 Volume : 11 Rs. : 15/- Annual Subscription : Rs. 180/-




## ஜி–20 மாநாட்டின் மகிமை



இந்தியாவிடம் மீண்டும் கிடைக்குமா கச்சத்தீவு ?



இஸ்ரேல் யுத்தம்



சென்னைக்கு ஏன் இந்த சோதனை?

கிளியோ பாட்ரா அழகியா? அரசியா?



## அன்றாடம் வாழ்வில் தேவைப்படும் சட்டங்கள்







**செய்திகலவை இதழ் குழுமத்தார்**



"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

பூங்குன்றனார்

# உள்ளே


ஆசிரியர் பக்கம் – மழை ........ 4-5

கிளியோ பட்ரா அழகியா? அரசியா? ........ 6

அன்றாடம் வாழ்வில் தேவைப்படும் சட்டங்கள் ........ 7

இஸ்ரேல் யுத்தம் தேவையா? ........ 8-11

மீண்டும் இந்தியாவிடம் கிடைக்குமா கச்சத்தீவு ? ........ 12-13

விடாக்கண்டன்? கொடக்கண்டன்? ........ 14

வழி மண்டல மேல் சுழற்சி ........ 15

ஜி–20 மாநாட்டின் மகிமை ........ 16-17

பாட்டு அரங்கம் ........ 18-21/26

பெண்பிள்ளைகளை வளர்ப்பதில் தந்தையின் பொறுப்பு ........ 22-25

யார் இந்த திருநாவுக்கரசு? ........ 27

மாலிக்கபூர் –மதுரை மீனாட்சி ........ 28

ராணியின் சுவையான சமையல் ........ 29

சிரித்தால் இன்ப மயம் ........ 30


SEITHI KALAVAI INDIA



# மழை

# சென்னைக்கு ஏன் இந்த சோதனை?

## ஓர் அலசல்

சிங்கார சென்னை என எல்லோராலும் பாராட்டப்படுகிற சென்னையில், மழைக்காலங்களில் அங்கு வாழும் மக்கள் எண்ணற்ற வேதனைகளை சந்திக்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்த சூழல் எப்போது சரிசெய்யப்பட்டு நிரந்தரமான ஒரு தீர்வு கிடைக்கும் என ஏங்குபவர்கள்தான் இங்கு ஏராளமாக வசிக்கின்றனர்.

இதற்கு முதல் காரணம் சொல்ல வேண்டுமென்றால், சென்னையை சுற்றி இருந்த ஏரிகள் அனைத்தும் பிளாட் போட்டு விற்பவர்களால் களவாடப்பட்டு கட்டிடங்கள் கட்டப்பட்டு மக்கள் குடி பெயர்ந்தனர் அவ்வாறாக காணாமல் போன ஏரிகள் சிலவற்றை தெரிந்து கொள்வோம்.

1. பள்ளிக்கரணை ஏரி 2. நுங்கம்பாக்கம் ஏரி 3. பெருங்குளத்தூர் ஏரி 4. போரூர் ஏரி 5. பெருகம்பாக்கம் ஏரி 6 தேனாம்பேட்டை ஏரி 7. வில்லிவாக்கம் ஏரி 8. வியாசர்பாடி ஏரி 9. மேடவாக்கம் ஏரி 10. திருவேற்க்காடு ஏரி 11. முகப்பேர் ஏரி 12. இரட்டை ஏரி 13. ஆவடி ஏரி 14. கல்லுக்குட்டை ஏரி 15 திருநின்றவூர் ஏரி 16. பாடியநல்லூர் ஏரி 17. பிச்சாட்டூர் ஏரி 18. விச்சூர் ஏரி 19. சிட்லபாக்கம் ஏரி 20. மாம்பலம் ஏரி 21. கோடம்பாக்கம் ஏரி 22. ஆலம்பாக்கம் ஏரி என்று சொல்லிக்கொண்டே செல்லலாம்.

1906 ஆம் ஆண்டு சென்னை மாகாணப்பட்டணத்தின் கணக்கீட்டின் படி பார்த்தால் சென்னையில் மட்டும் (ஏரி, குளம், குட்டை, தாங்கள் உள்பட) 474 நீர்பிடிப்பு நிலைகள் இருந்ததாக ஆய்வு ஒன்று சொல்லுகிறது. இவைகள் எல்லாம் ஜிபூம்பா என மாயமாய் மறைந்து விட்டதா? எப்படி மாயமாய் மறைந்து போகும் என நீங்கள் நினைக்கலாம்.

தமிழகத்தில் மட்டுமல்ல மற்ற



மாநிலங்களிலிருந்து சென்னை சென்றால், எப்படியும் வாழ்க்கையை ஓட்டிவிடலாம் என்ற எண்ணங்களோடு மக்கள் சிறிது சிறிதாக வந்து தற்போது சென்னை மட்டுமல்ல, சுற்று புறங்களிலும் எந்த இடமாக இருந்தாலும், அதில் விலைக்கோ குத்தகைக்கோ (போக்கியத்திற்கோ) அல்லது, வாடகைக்கோ வந்து வாழத்

SEITHI KALAVAI INDIA

தொடங்குவதில் ஆர்வம் காட்டுவதால் மேற்கண்ட நீர்நிலை பூமிகள் அனைத்தும் அழிக்கப்பட்டு அதில் இதற்காகவே இருப்பவர்களால் பிளாட் போட்டு விற்பனை படுஜோராராக நடைபெறவே, மக்களுக்கு ஏதாவது ஒரு வகையில் அறிமுகம் ஆனவர்களை கொண்டும், விளம்பரங்கள் செய்தும், அதை நல்ல லாபத்திற்கு விற்று



விடுகின்றனர். மக்கள் அதில் வீடுகட்டி குடியேறும் சூழலில் எந்த ஒரு அரசு ஆண்டாலும், இவர்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தரவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகிறது. அரசு எத்தனை கோடிகள் செலவு செய்து சீர்படுத்திட நினைத்தாலும் அது உடனடியாக முடியாத காரியமாகத்தான் ஆகும் காரணம் யானை பசிக்கு சோளப்பொறி போட்டால் பசி அடங்குமா? அது போலத்தான் இந்த நிலையும்.

முதலில் தேக்கி வைக்கும் நீர்நிலைக்கு மேல் சில அடிகள் உயரத்தில் தங்கள் வீடுகளை கட்ட வேண்டும். அது இனி முடியாது ஏற்கனவே கட்டிகுடிவந்தாயிற்று வேறு என்ன செய்ய?

ஒன்று மழைக்காலங்களில் நீர்நிலைகளில் இருந்துவரும் அதிகப்படியான நீர்களை பல பகுதிகளாக பிரித்து ராட்சச குழாய்கள் (அது எத்தனை தூரமாக இருந்தாலும்) பூமியின் அடியில் புதைத்து அதன்மூலம் கடலுக்கு கொண்டு செல்ல வேண்டும்.. இரண்டாவது பெய்யும் மழை நீர் தேங்காமல், அதை முறையாக மேலை நாடுகளில் உள்ளது போல குறிப்பாக சிங்கப்பூரில் உள்ளது போல, ஆங்காங்கே வடிகால்களை அமைத்து, அதையும் ஏற்கனவே உள்ளஅந்த குழாய்களோடு இணைக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், இவைகளில் அவ்வப் போது அடைப்படும் சேர், மண், இதர கழிவுப் பொருள்கள் தேங்காமல் (அடைக்கபடாமல்) அதை சரி செய்திடவேண்டும் சராசரியாக சில நூறு அடிகள் தூரத்திற்கு ஒன்று என்று, கடலில் கலக்கும் வரை உள்ள தூரத்திற்கு ஆழ்கிணறுகள் போன்று உருவாக்கம் செய்திட வேண்டும். இவைகளில் ஆடு, மாடுகள், மனிதர்கள் தவறி விழுந்துவிடாமல் இருக்க, போதுமான பாதுகாப்பு செய்திட வேண்டும். இவைகள் அனைத்தும் உடனடியாக எந்த அரசாங்கமும் செய்திட இயலாது. இது ஒரு தொலைநோக்கு திட்டம் எந்த அரசு வந்தாலும் கவனம் செலுத்தி செய்திட வேண்டும். ஒருகால் அரசு மாறினாலும், வருபவர்களும் ஈகோ பார்க்காமல் தொடர்ந்து அந்த பணிகளை தொய்வின்றி செய்திட வேண்டும். இவ்வாறாக செயல்பட்டால் ஒழிய சென்னைக்கு நிரந்தர தீர்வு என்பது என்றுமே இல்லை என்பதே உண்மை.

SEITHI KALAI INDIA

# கிளியோ பாட்ரா
# அழகியா? அரசியா?



கிளியோ பாட்ரோ ஒரு கருப்பு அழகி என்றும், கழுதைப் பாலில் தான் குளிப்பார் என்றும் நம்மில் வெகு சிலருக்கு தெரிந்திருக்க வாய்ப்புள்ளது.

உண்மையில் கிளியோ பாட்ரா ஒரு போர் வீராங்கனை என்பதும், எகிப்து நாட்டின் அரசபரம்பரையில் வந்த வழித்தோன்றல் தான் என்பதும் எத்தனை பேருக்குத் தெரியும். கிறிஸ்து பிறப்புக்கு முன் 50-வது ஆண்டில் இருந்த அலெக்ஸ்சாண்டர் மறைவுக்கு பிறகு அந்தப் பேரரசில் வந்த கடைசி பேரரசிதான் கிளியோ பாட்ரா.

முன்னதாக இந்த வரிசையில் தோலாமியன் என்னும் பேரரசர் இருந்தார், இவருக்கு அடுத்து கடைசி பேரரசியாகத்தான் இந்த கிளியோ பாட்ரா இருந்தார். இவர்களுடைய நாட்டில் ஒரு பழக்கம் நடைமுறையில் இருந்தது. அது என்னவென்றால், தங்கள் நாடு அடுத்தவர்களின் ஆளுமைக்கு சென்று விடக்கூடாது என்பதற்காக, தன் உடன்பிறந்த சகோதரரையே அரச பெண்கள் திருமணம் செய்து கொள்வார்கள்.

இந்த சூழலில் தான் கிளியோ பாட்ராவும், தன் சகோதரரையே திருமணம் செய்து கொண்டார். இவரது சகோதரரோ இவரை ஆட்சிக்கட்டில் அமர வைப்பதாக இல்லை. ஆதலால், ரோமில் அப்போது ஆட்சி செய்து கொண்டு இருந்த ஜீலியஸ் சீசரை நாட்டை மீட்பதற்காகப் பயன்படுத்தி, சகோதரரை வீழ்த்தி நாட்டை பிடித்தார் கிளியோ பாட்ரா.

பின் ஜீலியஸ் சீசரையே காதலித்து திருமணமும் செய்து கொண்டார். அவருடன் வாழும் காலத்தில் சீசர் இறந்து விடவே, ரோமையும் சேர்த்து ஆள கிளியோ பாட்ரா முடிவெடுத்தபோது, சீசரின் மகன் அகஸ்டஸ் சீசர் எதிராக நிற்கிறார்.

அகஸ்டஸ் சீசரை வீழ்த்த அங்கிருந்த மார்க் ஆண்டனி என்ற தளபதியுடன் சேர்ந்து போரைத் தொடங்க அதில் வீழ்ச்சியடைந்தார் கிளியோ பாட்ரா. எனினும் எதிர்ப்படையில் பெரும் சேதத்தை ஏற்படுத்தியதாக வரலாறில் கிளியோ பாட்ராவைப் பற்றிச் சொல்லப்படுகிறது. போரில் கப்பல் படைக்குத் தலைமை தாங்கி வழி நடத்திச் சென்றார் என்றும் சொல்லப்படுகிறது.

இப்பொழுது சொல்லுங்கள் கிளியோ பாட்ரா அழகி மட்டுமல்ல, திறமையான அரசியும் கூட என்று சரிதானே.

V. ராஜ்மோகன்

SEITHIKALAVAIINDIA

# அன்றாட வாழ்வில் தேவைப்படும் சட்டங்கள்

## கேள்வி பதில்

100

குற்றவியல் வழக்கறிஞர் முனைவர். ஏ.பி.ஜெயச்சந்திரன்
M.A., (Crimin), M.Phil (Police Admin), Ph.D (Law), MSW, LLB, DLLAL, DCACJ., DHRD M.Sc., (Psy)
Cell :98430 30210



**கேள்வி :** சிறுவர் திருமண தடைச்சட்டம் 1929-ல் எதற்காக இயற்றப்பட்டது அதன் விளக்கம் என்ன?

**பதில் :** 1929-ஆம் ஆண்டில் இந்தியாவில் பல இடங்களில் குழந்தைத் திருமணங்கள் நடந்து வந்த காலத்தில், அதை தடைசெய்வதற்கு கொண்டு வரப்பட்டதுதான் சிறுவர் திருமண தடை சட்டம். எல்லா மதத்தினருக்கும் விதி விலக்கின்றி பொருந்தும் சட்டம் இது எனலாம்.

சட்டப்படி சிறுவர்கள் என்பவர்கள் 21 வயது பூர்த்தி அடையாத ஆண்கள், 18 வயது பூர்த்தி அடையாத பெண்கள் ஆவார்கள்.

சிறுவர் திருமணம் செய்வதும், நடத்துவதும் அதற்கு உடந்தையாக இருப்பதும் இன்னும் சொல்ல போனால் ஏன், அதில் பங்கேற்பதும் கூட கிரிமனல் குற்றம் என தெரிவிக்கபட்டுள்ளது. இது போன்ற சமயங்களில் காவல் துறையினர் நேரிடையாக தலையிட்டு நடவடிக்கை எடுக்கலாம். நீதிமன்ற பிடிவாரண்ட் இல்லாமலேயே கைது செய்யலாம் குற்றம் நடந்து ஒரு ஆண்டு கடந்துவிட்டால் அந்த குற்ற நடப்பின் மீது நடவடிக்கை எடுக்க குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அதிகாரம் இல்லை இந்த புகாரை நீதி மன்றம் ஏற்காது.

**கேள்வி :** விவாகரத்து வழக்குகளில் மனதளவு கொடுமை ஒரு காரணமாக உள்ளது. மனதளவில் கொடுமை என்பதற்கு சட்ட விளக்கம் என்ன?

**பதில் :** மனதளவு கொடுமை குறித்து உச்ச நீதி மன்றம் விளக்கம் தெரிவிக்கும் போது, மனதளவு கொடுமைகளுக்கு வரையறை இல்லை எனவும், அவை வரையறையில் அடக்க முடியாத ஒன்று எனவும், வழக்கின் உண்மைகளை கொண்டு இருதரப்பின் தகுதி நிலை, வாழ்வு நிலை, சமுதாய எதிர்பார்ப்பு உள்ளிட்டவற்றை கருத்தில் கொண்டு தான் முடிவு செய்யப்படும் எனவும், நீண்ட நாட்கள் கணவன் மனைவியுடனும், மனைவி கணவனுடனும் உடலுறவு கொள்ள மறுத்தால் அது மனதளவு கொடுமை ஆகும். இவை தவிர கணவனோ, மனைவியோ மற்றவர் சம்மதம் இல்லாமல் குழந்தை வேண்டாம் என தன்னிச்சையாக முடிவு எடுத்தால், அதுவும் மனதளவு கொடுமை ஆகும்.

கணவன், மனைவி ஒருவரை ஒருவர் பேசும் ஏளனச் சொற்களாலும், அற்பமாக நடத்தும் முறையானதும் தொடர்ந்து மனவேதனை அடையச் செய்து வாழ்வையே துன்பத்தில் ஆழ்த்தினால், இதுவும் மனக் கொடுமையாகும்.

இல்லற வாழ்வில் மனநலம் பாதிக்குமாறு நடந்தால் கூட அதுவும் மன கொடுமையாகும். ஆனால், அன்றாட வாழ்வில் ஏற்படும் கோபதாபம், வாய்ச் சண்டைகள் சாதாரணமாக ஏற்படும் மோதல்கள், உரசல்கள் உள்ளிட்டவை மனக்கொடுமை ஆகாது என தெளிவாக தெரிவித்துள்ளது உச்ச நீதிமன்றம்.

SEITHIKALAVAI INDIA

# இஸ்ரேல் யுத்தம்
## தேவையா?



யூத மக்களுக்கென்று எந்த இடமும் நிரந்தரமாக இல்லாதததால் கிட்டதட்ட மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டு ஒவ்வொரு நாடுகளாக பெயர்ந்து சென்றுதான் சிறு சிறு குழுக்களாக வாழ்ந்து வந்தனர்.

ஆனால், அவர்கள் மனதில் தங்களுக்காக கடவுளால் கொடுக்கப்பட்ட பூமிதான் இஸ்ரேல் என உறுதியாக நம்பினர். இவர்கள் இவ்வாறு நினைத்து கொண்டிருந்த நேரத்தில் அந்த நாடு பிரிட்டானியர்களிடம் தொடங்கி ஆசீரியர்களிடம்தான் இருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில்தான் உகாண்டாவை பிரித்து தனி நாட்டை உருவாக்கலாம் என்று அன்றைய பிரிட்டானிய பிரதமர் பால்ஃபோர் 1917 ம் ஆம் ஆண்டு வாக்குறுதியை அளித்தார். இது சாத்தியப்படுமா சாத்தியப்படாதா என்ற சூழ்நிலை இருந்த போதிலும் யூதர்கள் அந்த வார்த்தையை கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர்.

பிரிட்டானியப் பிரதமர் பால்ஃபோர் அங்கே ஏற்கனவே வசிக்கும் மக்களின் அடிப்படை உரிமைக்கு ஏதும் பங்கம் வந்து விடக்கூடாது என்று சொன்னதை மாத்திரம் யூதர்கள் மறந்து விட்டனர். இது ஒரு வகையில் அவர்களின் சுயநலம் என்றே கூறலாம்.

1948 ஆம் ஆண்டு இரண்டாவது உலகப் போர் முடிந்தபின் ஐ.நா.வின் ஒப்புதலோடு இஸ்ரேல் தனி நாடாக அறிவிக்கப்பட்டவுடன் அரபு நாடுகள் தாக்குதல் நடத்தின.



இஸ்ரேலில் வசிக்கும் யூதர்கள் நாங்கள் அரபு நிலங்களை விலை கொடுத்துத் தான் வாங்கினோம். என்று தான் சொல்வார்கள். யூதர்கள் சொல்வது உண்மையாக இருந்தாலும் அவர்கள் மனதில் நாட்டையே வாங்கி விட்ட தான எண்ணம் தான் மேலோங்கியது. இதற்கு ஒரு காரணம் அவர்கள் தரப்பில் வைக்கப்பட்டது. அது பாலை வனமாக இருந்த நிலங்களை பயிர் செய்யும் விளை

SEITHI KALAI INDIA

நிலங்களாக பசுமையாக மாற்றியதில் யூதர்களின் பங்களிப்பும் உழைப்பும் உண்டு என்பது தான்.அரபு நாடுகளின் தாக்குதல்கள் தொடர்ந்தது 1949 ஆம் ஆண்டு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதும், ஜோர்டான் நதியின் மேற்குப் பகுதியில் இருக்கும் பரவலான பகுதியை ஜோர்டான் நாடு தன் வசப்படுத்தி கொண்டது.



தன் பங்களிப்பாக எகிப்து நாடு கிழக்கில் மத்திய தரைக்கடலை ஒட்டியிருக்கும் காஸாத் துண்டு என்ற பகுதியை கைப்பற்றிக் கொண்டது. மீண்டும் போர் நடந்து 1967 ஆம் ஆண்டில் அரபு நாடுகள் படு தோல்வி அடைந்தைத் தொடர்ந்து காஸாத்துண்டும், மேற்குக் கரைப் பகுதியும் இஸ்ரேல் வசம் வந்தது. அதன்பின் அனைத்து யூதர்களும் ஒன்றாக சேர்ந்து அங்கு வாழத் தொடங்கி விட்டார்கள். இது தான் யூதர்களின் வரலாறு எனலாம். சரி இனி யுத்த களத்திற்கு செல்லலாம்.

இஸ்ரேல் நாட்டிற்குள் பாலஸ்தீன மக்கள் தங்களின் அடையாள அட்டையை காட்டி, காலையில் சென்று பனிகள் செய்து மாலையில் காசா பகுதியில் உள்ள தங்கள் இல்லங்களுக்கு சென்றுவிட வேண்டும் என்ற உத்திரவோடு பாலஸ்தீன மக்களுக்கு தங்கள் நாட்டில் பணி செய்திட (இஸ்ரேல்) அனுமதித்ததால் பாலஸ்தீன மக்கள் அவ்வாறே பணிகள் செய்து தங்கள் வாழ்வாதாரங்களில் வாழ்ந்து வந்தனர். கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இரண்டு வாரங்களுக்கு வழிகள் அடைத்து விட்டதாக இஸ்ரேல் அறிவித்தது செய்வது அறியாது திகைத்த பாலஸ்தீன மக்கள் இஸ்ரேல் மீது மிகவும் வருத்தம் கொண்டனர்.

இதற்கு காரணம் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பாலஸ்தீனத்தில் உள்ள அமாசின போராளிகளால் ராக்கெட் ஏவப்பட்ட சத்தம் காசா பகுதியிலிருந்து கேட்டது என்பதால் செப்டம்பர் மாதம் வழிகளை இஸ்ரேல் அடைத்து விட்டதாக சொன்னது. இதற்கிடையில் புதிது, புதிதாக சில சுயநல அரசியல்வாதிகள் காசாவில் உள்ள தன் மக்களுக்கு சில தேவையில்லாத கட்டுபாடுகளை விதித்ததாகவும் சொல்லப்படுகிறது. இதற்கிடையில் மேற்கு கடற்கரை பகுதியில் வசித்துவரும் பாலஸ்தீன மக்களிடையே புதியதாக மேலும் சில வீடுகளை கட்டி அங்கே யூதர்களை குடியமர்த்தி வருகிறது இஸ்ரேல் ராணுவம்.

இஸ்ரேலுக்கு பேருதுவியாக இருக்கும் அமெரிக்கா இதற்கு எதிர்ப்பு தெரிவித்த

SEITHI KALAVAI INDIA

போது அதற்கு சில விஷயங்களை சப்பை கட்டு கட்டுவதாக சொல்லுவார்களே அதே போன்ற பதில்களை இஸ்ரேல் சொல்லிவருவதும் அமெரிக்காவிற்கு அதிருப்தியை தந்தது.

இந்த நிலையில் தான் காசா பகுதியில் வசிக்கும் அமாசின போராளிகள் தங்கள் நாட்டை சுற்றி இருக்கும் இஸ்லாமிய நாடுகளுக்கு ஒரு செய்தியை அனுப்புகின்றனர். அதில் இஸ்ரேலை தாக்க போகிறோம் முதல் அடியாக நாங்கள் தான் உள்ளே நுழைந்து தாக்கப்போகிறோம். அதனால், உங்கள் உதவிகளை உடனே செய்ய வேண்டும் என்ற தகவல் தந்த கையோடு, ஐந்தாயிரம் ராக்கெட் களையும் ஏவி சேதங்களை விளைவித்ததோடு இஸ்ரேலில் புகுந்து அங்கிருந்த யூதமக்கள் சிலரை பிணைய கைதிகளாக பிடித்து கொண்டு காசாபகுதிக்கு திரும்பி உள்ளது.

தங்கள் நாட்டின் மீது ஏவப்படும் நாட்டிற்கு எதிரான ஏவுகனைகளை வானிலேயே தடுத்து அழித்து விடும் திறன் ஆற்றல் இருந்தும், தொடர்ந்து வந்த பல தாக்குதலினால் திறன் செயல் படாமல் போனதும்–தங்கள் நாட்டு மக்களை பிடித்து கொண்டு அமாசின போராளிகள் சென்றதும், இஸ்ரேலுக்கு அதிக கோபத்தை ஏற்படுத்தியதால் போரை தொடங்கி நடத்தி வருவதும், அதில் அப்பாவி பாலஸ்தீன மக்கள் குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை தங்கள் உயிர்களை பறிகொடுப்பதும் தொடந்து கொண்டு இன்றும் இருக்கிறது என்பது தான் மிகப் பெரிய வேதனை.

இஸ்ரேலுக்கு அமெரிக்கா உதவுவது போல் பாலஸ்தீன அமாசின போராளிகளுக்கு ஈரான் உதவிடுமா? அப்படி நடந்தால் இந்த யுத்தம் எதுவரை கொண்டு சென்று விடும் என்பதை தங்களின் யூகங்களுக்கே



விட்டுவிடுகிறோம். அமெரிக்கா, ஈரான், வடகொரியா, தென் கொரியா, உக்ரைன், ரஷ்யா இதுபோன்ற நாடுகளின் தேவையற்ற யுத்தங்கள் இன்றல்ல, நேற்றல்ல ஆதிமனிதன் தோன்றியதிலிருந்தே நடந்து கொண்டுதான் இருக்கிறது. மண் ஆசை, பொன் ஆசை, பெண் ஆசைகளுக்காக அரசர்கள் அடித்து கொண்டனர். இன்று பெரும்பாலும் மண் ஆசைக்காக நவீன கருவிகள் கொண்டு மனித சமுதாயத்தை மனிதர்களே அழிக்க முற்ப்பட்டு விட்டனர், என்பதை எண்ணும் போது மனம் பதைபதைக்கிறது. எதிர்காலத்தில் எவ்வளவோ இயற்கை பேரழிவுகள் மனித இனத்தை முற்றிலும் அழிக்க காத்து இருக்கிறது. அதிலிருந்து இந்த பூமி உருண்டையில் வசிக்கும் ஒட்டு

SEITHI KALAIVAI INDIA

மொத்த மக்களை காப்பாற்ற முயற்ச்சி செய்யலாமே அதை விடுத்து யுத்தம் என்ற பெயரில் நவீன யுத்த கருவிகளைக் கொண்டு மனித சமுதாயத்தை அழிப்பதோடு, இயற்கை நமக்கு கொடையாகக் கொடுத்த புல், பூண்டு, செடி, கொடி, மரம், ஊர்வன, பறப்பன, நடப்பன ஆகியவற்றையும் அழித்து எதை



ஆள போகிறான் பேராசை உள்ள மனிதன். இனியும் அப்பாவி மக்கள் எப்பகுதியில் பாதிக்கப்பட்டாலும் உலக மக்கள் ஒன்று சேர்ந்து போராடி அதை தடுத்திட முன் வரவேண்டும் என்பதே எங்களது தாழ்மையான வேண்டுகோள். போர்களே இல்லா புவி எப்படி இருக்கும் அதை ஆனந்தத்தோடு எண்ணிப்பாருங்கள் அந்த நாள் விரைவில் வந்திட வேண்டும் என எல்லாம்வல்ல இயற்க்கையை (இறைவனை) வேண்டுவோம்.

M. ரமேஷ்முருகன்



# உண்மையில் இந்திய ரூபாய் மதிப்பு குறைந்து விட்டதா?

ஆம் என்று சொல்பவர்கள் பொய் சொல்கிறார்கள் என்று நாம் பொருள் கொள்ள வேண்டும். உண்மையில், மற்ற நாடுகளின் கரன்சி நோட்டுகளை ஒப்பிடும்போது, இந்திய ரூபாயின் மதிப்பு அதளபாதாளத்திற்குள் சென்றுவிடவில்லை என்பதை உறுதியாக நம்பலாம்.

காரணம், இந்திய ரூபாயின் மதிப்பு மேலும் வளர்ச்சி அடைய வலுவான வங்கித்துறை உருவாக்கப் பட்டிருக்கிறது. உலகில் ஒட்டுமொத்த வர்த்தகமும் அமெரிக்கடாலரின் மதிப்பிற்கேற்பதான் செயல்பட வேண்டிய சூழல் இருந்தது. இருக்கிறது. அதை, முறியடித்து நமது பாரத தேசம் பல நாடுகளுடன் நமது ரூபாய் மதிப்பில் வர்த்தகம் செய்திட முன்னெடுத்து செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக அமெரிக்கடாலருக்கு நிகராக யூரோ எவ்வளவு வீழ்ச்சி உள்ளது என்று பார்த்தால் நன்கு தெரியும். இன்று ரஷ்யா, ஜெர்மன், ஈரான், சவுதி, மலேஷியா, சிங்கப்பூர் போன்ற பதினைந்து நாடுகளுக்கும் மேலாக இந்திய ரூபாயை பரிவர்த்தனை முறையில் ஏற்றுக் கொண்டு செயல்பட தொடங்கியுள்ளது இனி அமெரிக்க டாலர் மதிப்பு குறைய தொடங்கும் என்பது தானே உண்மை. இந்த பெருமை எல்லாம் நமது பாரத பிரதமரையே சாரும், மேலும் இத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமனையும் சாரும் என்றும் சொல்லலாம்.

S. பிரபாகரன்



SEITHI KALAI INDIA

# இந்தியாவிடம் மீண்டும் கிடைக்குமா கச்ச தீவு ?



கச்சத்தீவு கி.பி. 1605-ஆம் ஆண்டின் வாக்கில் மதுரை நாயக்க மன்னர்கள் வசம் இருந்தாகவும், அதன் பின் தளவாய் சேதுபதி தேவர் வசம் கி.பி.1635 வரை இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. பிறகு சென்னை மாகாணம் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டு இருந்தபோது, சென்னை மாகாணத்தில் ஜமீன் தாரர்கள் பதவி கொண்டு வரப்பட்ட பின், ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியாரால் அங்கீகரிக்கப்பட்ட ராணி மங்களேசுவரி நாச்சியார் 1803 முதல் 1812 வரை நிர்வாகம் செய்ததாகவும் சொல்லப்படுகிறது.

இந்தக் கச்சத்தீவு, ராமேசுவரத்திற்கு 10 மைல் தூரத்தில் இருக்கிறது. இதை ராமநாதபுர அரசர் தனியாருக்கு குத்தகைக்கு கொடுத்து பின், ஜமீன் ஒழிப்பு முறை ஆங்கிலேயர்களால் கொண்டு வரப்பட்டு நிறை வேறியாதாகவும் சொல்லப் படுகிறது. இது ராமேசுவரம் கர்ணத்தின் அதிகாரத்திற்கு உட்பட்ட தீவு ஆகும். சுமார் 285 ஏக்கர் பரப்பளவு உள்ளது.

இந்தியா, இலங்கை செய்து கொண்ட கச்சத்தீவு ஒப்பந்தம் செல்லத்தக்கது அல்ல என, அன்றைய தமிழக முதல்வர் செல்வி. ஜெ.ஜெயலலிதா 2008 ஆம் ஆண்டு உச்ச நீதி மன்றத்திலே வழக்கு தொடுத்ததோடு இல்லாமல், 09.06.2011 ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத்தில் தமிழக வருவாய்த் துறையையும், சேர்க்க வேண்டுமென ஒரு தீர்மானத்தையும் கொண்டு வந்து நிறைவேற்றியதும் குறிப்பிடத்தக்கது.

தமிழக அரசால் 1972-ஆம் ஆண்டு கச்சத்தீவு இராமநாதபுரம்



மாவட்டத்தின் ஒரு பகுதி, என அரசிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றும் தீவீன் சர்வே எண் 1250 எனவும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தியாவிற்கும், இலங்கைக்கும் எல்லை வரையறுக்கப்பட்டபோது அதாவது, 28.06.1974-ஆம் ஆண்டில் அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரால் கச்சத்தீவு இலங்கைக்கு தாரை வார்த்து

S.R.B. பாரதிராஜா

SETHIKALAI INDIA

கொடுக்கப்பட்டது.

அதன் பிறகு படிப்படியாக தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தையே, சிதைத்திடும் வகையில், ஒரு முனைப்போடு இலங்கை அரசு பல கெடுபிடுகளை செய்ததோடு அல்லாமல், மீனவர்களின் உயிர்களோடு உடைமைகளை பறித்து பல வழிகளில் இன்றும் அச்சுறுத்தி வருகிறது என்பதும் நாடறிந்ததே.



கச்சத்தீவை இந்தியா மீட்க வேண்டும் ஏனெனில், முறையான சட்டமியற்றி இந்திய நாடாளு மன்றத்தில் தீர்மானமாகக் கொண்டுவந்து அதை நிறைவேற்றாமலேயே கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்து கொடுத்தது மாபெரும் தவறு என்றும், இதை மையமாக வைத்து ஐ.நா சர்வதேச கவுன்சலின் மூலம் மீண்டும் கச்சத்தீவை மீட்டு விடலாம் என்றும் அரசியல் வல்லுநர்கள் சொல்வது ஒரு புறம் இருந்தாலும், மறுபுறம் இன்றைய இலங்கை அரசு பொருளாதாரத்தில் படு வீழ்ச்சியடைந்து, நம் பாரத தேசத்திடம் பல உதவிகளை பெற்று வரும் இந்த நிலையில், மத்திய அரசு மனது வைத்தால் அல்லது ஒரு முயற்சி எடுத்தாலே இலங்கை அரசிடமிருந்து நட்பு நாடு என்ற முறையிலேயே சங்கடங்களும் சச்சரவுகளும் இல்லாமலேயே 99 ஆண்டுகளுக்கு ஒரு ஒப்பந்தம் செய்து குத்தகைக்கு பெற்றுக் கொண்டால், அதன் பயனாக தமிழக மீனர்வர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு மிக பெரிய உறுதுணையாக இருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

தமிழக மீனவர்கள் முன்பு போலவே மீன் பிடி வலைகளை காயவைத்தும், தங்கி ஓய்வெடுத்தும் புனித அந்தோணியார் ஆலயத்தில் வழிபாடு நடத்தியும், வாழவும் வழி கிடைக்கும் என்பதோடு, நமது ராணுவத்தையும் அங்கு நிறுத்தி நமது எல்லையை அந்நிய சக்திகள் ஊடுறுவ முடியாதவாறும் தடுத்து நிறுத்தி பாதுகாத்திடவும், நமது விஞ்ஞானிகள் கடல் சார்ந்த பல ஆய்வுகளை செய்திடவும் வழி வகைகள் பிறந்திடும்.

இந்த குத்தகை ஒப்பந்தம் நல்ல பயனைத் தரும் என்பதும், ஏகோபித்த தமிழர்களின் ஆதரவையும், அவர்களின் மனக்குமுறல்களுக்கு ஒரு அற்புத வடிகாலாகவும் அமையும் என்பதும் திண்ணம். தமிழகஆட்சிகட்டிலில் அமர்ந்திருக்கும் ஆட்சியாளர்களும் சற்று நிம்மதியாக இருந்திடலாம். கச்சத்தீவை மீட்டிட இன்றைய நமது பாரத பிரதமர் மோடிஜி முன் வர வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் எண்ணமும், வேண்டுகோளும் ஆகும்.


SEITHI KALAI INDIA




என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

எலும்பில்லாத புழுவை வெயில் காய்ந்து வருத்துவது போல, அன்பில்லாத உயிரை அறக்கடவுள் வருத்தும்

# விடாக்கண்டன்-கொடாக்கண்டன்



தன்னம்பிக்கை நாயகன்
அமரர் ஏ. உதயசந்திரன் B.Sc., B.L.,
(வரி ஆலோசகர். வழக்கறிஞர்)

விஞ்ஞானி ஒருவர் தன் காரில் பயணம் செய்து கொண்டு இருந்தார் வழியில் டயர் பஞ்சர் ஆகிவிட்டது கடை ஏதும் அருகில் இல்லை, குறைந்தது ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் கடை இருந்தது, கூட யாரும் வராததால், அவரே டயரை மாற்ற ஆரம்பித்தார். அனைத்து போல்ட்டையும் கழட்டி விட்டு ஸ்டெப்னி எடுக்கப் போகும் போது, கால் இடறி கீழே விழுந்தார் கையில் வைத்திருந்த போல்டுகள் அருகில் இருந்த குட்டையில் தவறி விழுந்து விட்டது.

இப்பொழுது என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டு இருந்தார். அப்பொழுது கிழிந்த ஆடையோடு ஒரு வழிப்போக்கன் வந்தான் வந்தவன் இவரைப் பார்த்து ஐயா என்ன ஆச்சு? என்றான் இவரோ இவனிடம் சொல்லி என்ன ஆகப் போகிறது? என்று எண்ணியபடி ஒன்றும் இல்லை நீங்கள் போகலாம் என்றார், அந்த வழிப்போக்கன் கிளம்ப எத்தனித்தான், அந்த விஞ்ஞானிக்கு அப்பொழுது திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. இந்த சாக்கடைக் குட்டையில் இவனை விட்டால் யாரும் இறங்க மாட்டார்கள். அதனால் இவனை இறங்கச் சொல்லலாம் என்று எண்ணி, அவனிடம் நான் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் தருகிறேன். அந்த குட்டையில் விழுந்த என்னுடைய போல்ட்டை எடுத்துத் தாருங்கள் என்றார், ஓ! இது தான் பிரச்சனையா? நான் அந்த குட்டையில் இறங்கி எடுத்து தர எந்த ஆட்சேபனையும் இல்லை ஆனால் அதைவிட ஒரு சுலப வழி இருக்கிறது, மூன்று சக்கரத்திலும் உள்ள ஒரு போல்ட்டை கழட்டி மாட்டி வண்டியை தயார் செய்து கொள்ளுங்கள். பிற்பாடு அருகில் உள்ள மெக்கானிக் கடைக்கு ஓட்டிச் சென்று, 4 போல்ட்டுகள் வாங்கி எல்லா சக்கரத்திலும் மாட்டிக் கொள்ளுங்கள் என்று சொன்னான் வழிப்போக்கன். நான் எத்தனை பெரிய விஞ்ஞானியாக இருந்தும் எனக்கு இந்த சுலப வழி தெரியாமல் போய்விட்டதே! இவனைப் போய் குறைத்து எடை போட்டு விட்டோமே! என்று தனக்குள் கூறிக் கொண்டு தலை குனிந்தார் விஞ்ஞானி,

நீதி: யாரையும் குறைவாக எண்ணக்கூடாது ஆம் நண்பர்களே! உயிருள்ள... பறவைக்கு எறும்பு உணவு. உயிரற்ற பறவையோ எறும்புக்கு உணவு, ஒரு மரத்தில் பல்லாயிரம் தீக்குச்சிகளை உருவாக்கலாம். அதே ஒரு தீக்குச்சியினால் பல்லாயிரக்கணக்கான மரங்களை அழிக்கலாம் நேரமும், சூழ்நிலையும் எப்பொழுதும் மாறலாம். எனவே. யாரையும் குறைவாக எண்ணவேண்டாம் பெருமைக்குரிய பலரும் வறுமையில் இருந்து வந்தவர்கள் தான் என்பதை உணர்ந்து கொண்டாலே நம்மையும் பிறர் ஏதாவது ஒரு வகையில் பெருமை சேர்க்கும் மனிதர்களாகவே கருதுவதோடு, கண்ணியத்துடன் என்றும் பிரியமுள்ளவரகளாகவே இருப்பார்கள் என்பது திண்ணம் தானே.

SEITHI KALAVAI INDIA

# வளிமண்டல மேல் அடுக்கு சுழற்சி ஏற்பட்ட ஆபத்து

**தூத்துக்குடி, நெல்லை, திருநெல்வேலியில் நடந்த துயரச் சம்பவம்.**

ஒரு வருடம் முழுவதுமாக பெய்ய வேண்டிய மழை இரண்டு நாட்களில் தொடர்ந்து பெய்து மிகப்பெரிய சேதத்தை உருவாக்கிவிட்டது.



இந்த மழை வெள்ளத்தில் ஏராளமானவர்கள் தங்கள் உடைமைகளையும் சிலர் தங்கள் வீடுகளையும் இழந்து விட்டனர் என்பது ஒருபுறம் வேதனையாக இருந்தாலும், மறுபுறம் ஏறத்தால 31 பேர்கள் உயிர் இழந்ததும் மிகவும் வேதனையாக இருக்கிறது. இதில், தமிழக முதல்வர் ஸ்டாலின் மற்றும்



அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர், அதிகாரிகள் நிவாரண பணிகளில் ஈடுபட்டு பணியாற்றினர் என்றாலும், உடனடியாக நிலைமையை சரிசெய்ய இயலாமல் போயிற்று அதற்கு காரணம், அளவு கடந்த வெள்ளம் சூழ்ந்தது தான். மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனும் வெள்ளப்பகுதிகளை சென்று பார்வையிட்டார். நடிகர் விஜயும் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

நெல்லை, தூத்துக்குடி (திருநெல்வேலி) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாகனம், வீடு, விவசாயம் ஆகியவற்றிற்கு



நிவாரணத்தொகையாக ரூ.1000 கோடியை தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவித்தது.

அப்பகுதி மக்களுக்கு சற்று மன ஆறுதலையும், மன மகிழ்சியையும் தரும் என நம்பலாம்.

SATHIKALAVAI INDIA

# ஜி-20 மாநாட்டின் மகிமை




**இந்தியாவின் தலைமைத்துவத்தின் கீழ் கடந்த செப்டம்பர் 9-10 தேதிகளில் புதுதில்லியில் நடைபெற்ற, 18-வது ஜி-20 உச்சிமாநாடு. வரலாற்றில் தனித்துவமான. வெற்றிகரமான ஒன்றாக நிரூபிக்கப்பட்டுள்ளது. உலகின் பொருளாதார மன்றமாகக் கருதப்படும் ஜி-20 ஆக பரிணமித்தது. உச்சிமாநாட்டின் புதுதில்லி பிரகடனம் ஒரு பிரகாசமாக தருணமாக அமைந்தது. பிரதமர் நரேந்திர மோடியின் தலைமைத்துவத்தின் கீழ், இந்தியாவின் விஷ்வ மங்கல் (உலக நலன்) தொலைநோக்கு, ஒரு அசாதாரணமான உலகளாவிய ராஜதந்திர பாரம்பரியத்தை உருவாகியுள்ளது. அது இந்தியாவுக்கு மட்டுமல்லாமல், உலகுக்கே வெற்றியைத் தந்துள்ளது.**

இந்தியாவில் நடைபெற்ற மாநாட்டையொட்டி உலகெங்கிலும் உள்ள தலைவர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் தில்லி வந்தனர். முக்கியாமான இந்த ஜி-20 உச்சிமாநாட்டில் கலந்து கொண்டதோடு மட்டுமல்லாமல், பிரதமர் நரேந்திர மோடி இந்த நாடுகளின் தலைவர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் நடத்தினார். பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பில், இந்த நாடுகளின் தலைவர்கள் ஜி-20 மாநாட்டை வெற்றிகரமாக ஏற்பாடு செய்ததற்காக இந்தியாவைப் பாராட்டிய அதே வேளையில், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கும் முக்கியத்துவம் அளித்தனர்.

அதிபராக முதல் முறையாக இந்தியா வந்த அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடன் பிரதமர் நரேந்திர மோடி பேச்சு நடத்தினார். பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, கல்வி, சுகாதாரம், ஆராய்ச்சி, புத்தாக்கம், கலாச்சாரம் மற்றும் மக்களுக்கு இடையிலான உறவுகள் உள்ளிட்ட இந்தியாவின் இருதரப்பு ஒத்துழைப்பின் நிலையான வேகத்தைப் பராமரிக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. நிலவின் தென்துருவத்தில் சந்திரயான்-3 தரையிறங்கிய வரலாற்று சாதனைக்காக பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இந்திய மக்களுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடி தமது அதிகாரப்பூர்வ இல்லத்தில் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவை செப்டம்பர் 8-ம் தேதி சந்தித்துப் பேசினார். இந்தியா பங்களாதேஷ் இருதரப்பு ஒத்துழைப்பை பன்முகப்படுத்துவது குறித்துபிரதமர் நரேந்திர மோடி, பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுடன் பயனுள்ள பேச்சு வார்த்தை நடத்தினார். இரு நாடுகளுக்கும் இடையிலான போக்குவரத்து இணைப்பு, கலாச்சாரம் மற்றும் தனிநபர்களுக்கு இடையேயான உறவுகள் உள்ளிட்ட பல அம்சங்களில் உறவுகளை வலுப்படுத்த இரு

SEITHI KALAVAI INDIA




தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் ஜக்னாத், பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசினார். உள்கட்டமைப்பு, நிதித் தொழில்நுட்பம், கலாச்சாரம் மற்றும் பிற துறைகளில் ஒத்துழைப்பு குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர். மேலும், உலகளாவிய தென்பகுதி நாடுகளின் நோக்கத்தை முன்னெடுப்பதற்கான இந்தியாவின் உறுதிப்பாடு மீண்டும் வலியுறுத்தப் பட்டது. மொரீஷியஸ் இந்தியாவின் தொலைநோக்குப் பார்வையான சாகர்: (கடல் சார் ஒத்துழைப்பு) என்பதன் ஒருங்கிணைந்த பகுதியாகும். இரு நாடுகளும் 75 ஆண்டு கால தூதரக உறவுகளை நிறைவு செய்துள்ள நிலையில், இந்தியா மொரீஷியஸ் உறவுகளுக்கு இது ஒரு சிறப்பான ஆண்டாகும்.

ஜி-20 மாநாட்டின் இடையே பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசினார். 2022 அக்டோபரில் பிரதமரான பிறகு பிரதமர் ரிஷி சுனக் இந்தியாவுக்கு வருவது இதுவே முதல் முறையாகும். இந்தியா இங்கிலாந்து இடையேயான விரிவான உத்திசார் கூட்டு செயல்பாடு மற்றும் செயல்திட்டம் 2030-க்கு ஏற்ப இருதரப்பு ஒத்துழைப்பின் பல்வேறு நிலைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து இரு நாடுகளின் பிரதமர்களும் திருப்தி தெரிவித்தனர். குறிப்பாக பொருளாதாரம், ராணுவம் மற்றும் பாதுகாப்பு, தொழில்நுட்பம், பசுமைத் தொழில்நுட்பம், பருவநிலை மாற்றம், சுகாதாரம் மற்றும் உடனடி செயல்பாட்டுப்பகுதிகள் இதில் அடங்கும்.

ஜி-20 மாநாட்டின் இடையே ஜப்பான் பிரதமர் ஃபியுமியோ கிஷிடாவுடன் பிரதமர் நரேந்திர மோடி இருதரப்புப் பேச்சு வார்த்தை நடத்தினார். இந்தியா - ஜப்பான் சிறப்பு உத்திசார் ஒத்துழைப்பு மற்றும் உலகளாவிய கூட்டு ஒத்துழைப்பை மேலும் ஆழப்படுத்து வதற்கான தங்கள் உறுதிப்பாட்டை இரு தலைவர்களும் மீண்டும் வலியுறுத்தினர்.

இவ்வாறு கலந்துகொண்ட பலநாட்டுத்தலைவர்களுடன் பலபுதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. 20-வது நாடாக புதியதாக ஆப்பரிக்கா ஒன்றியமும் உறுப்பு நாடாக சேர்க்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

நன்றி. நியூ இந்தியா சமாச்சார்

SEITHI KALAVAI INDIA



# பாட்டு அரங்கம்



நம் பாரத தேசத்திற்கென்று ஒரு பண்பாடு உண்டு என்றால், அது கலை, கலாச்சாரம், பண்பு, நாகரீகம் போன்றவற்றிற்குள் ஆணாகட்டும், பெண்ணாகட்டும் அச்சம், மடம், நாணம், பயிற்பு இவற்றோடு பெரியோரை மதித்தல் என்பதோடு மட்டுமல்லாமல், சபை அடக்கம், அடிப்படை ஒழுக்கம் போன்றவைகள் வாழையடி வாழையாக இதுவரை இருக்கிறது. என்பதால் தான் உலகில் உள்ள அனைத்து நாடுகளும் இன்றும் நம்மை மதிக்கிறது.

ஆனால், மேலை நாட்டு நாகரீகம் என்ற போர்வையில் பெரியோர்கள் மட்டுமல்லாது, சிறார்களைக்கூட விட்டு வைக்காமல் சிதற அடிக்க வைக்கிறது மோசமான சிலேடை வார்த்தைகள்.

அன்றைக்கு ஒரு பெண் பாதையில் தலை குனிந்துவரும்போது, எதிரில் வரும் ஆண் அந்த பெண்ணின் முகத்தை ஏர்நோக்கி பார்க்கும் போது கழுத்தில் மஞ்சள் கயிறு இருந்தால் ஒருவித மரியாதை ஆணிடமிருந்து வெளிப்பட்டு, ஒதுங்கி நடக்கத் தொடங்குவார்கள் அதுபோலவே தலை குனிந்து எதிரில் வரும் பெண் அந்த ஆணின் கால்விரல்களில் இருக்கும் மிஞ்சியைப் பார்த்து, (திருமணம் ஆன பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் தங்கள் பாத விரல்களில் மிஞ்சி போட்டு இருப்பார்கள் தான் திருமணம் ஆனவன் என்பதை பிறர் தெரிந்து கொள்வதற்காக) பெண்களும் அதே போன்ற மரியாதையுடன் ஒதுங்கி கடந்து சென்று விடுவார்கள்.



இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், எதிரில் வரும் திருமணம் ஆன பெண்ணின் முகத்தை பார்த்த பின் எதிரில் வரும் ஆணின் பார்வை அதற்கு கீழ் செல்லாது அதே போன்று, ஆணின் பாதத்தில் இருக்கும் மிஞ்சி எதிரில் குனிந்து வரும் பெண் பார்த்துவிட்டால் அவளது பார்வை அதற்கு மேலே செல்லாது இது எவ்வளவு பெரிய பண்பாடான நாகரீகம் நம் முன்னோர்கள் நமக்கு சொல்லிக்

SEITHI KALAI INDIA

கொடுத்துவிட்டு சென்றது,

ஒரு பெண் குழந்தை முதற்கொண்டு வயதான பெண்மணிகள் வரை தங்கள் முழு உடலை முடிந்தவரை மறைத்து தான் உடை அணிந்து இருப்பார்கள் அதுவும் ஒரு சபையில், (கூட்டத்தில்) இருப்பார்களேயானால் அளவாக அளந்து அடக்கமாக அதுவும் பண்பில் பாசத்தில், உதிர்த்த வார்த்தைகளை எவ்வளவு நாகரீகமாக பேச வேண்டுமோ (பேச வேண்டிய ஒரு நிலை வந்தால்) அப்படித்தான் பேசுவார்கள் ஆனால், அதுபோன்ற ஒரு




அழகான சூழல் இன்று (இல்லாமல்) இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும், சில சங்கடமான விஷயங்களை பெற்றோர்களே குழந்தைகளுக்கு திணித்து விடுகின்றனர் என்பதுதான் வேதனை அவைகளை தெரிந்து செய்கிறார்களா? அல்லது தெரியாமல் செய்கிறார்களா? என்பது தான் தெரியவில்லை! உதாரணத்திற்கு சொல்லவேண்டுமென்றால், சில தொலைக் காட்சிகளில் நடனம் பாடல், போட்டி போட்டுக்கொண்டு நடத்துகிறார்கள்.

(விரல் விட்டு எண்ணும்படியாக உள்ள தொலைக்காட்சிகள் உண்மையாக நசிங்கிப்போன கிராமிய கலைஞர்களை ஊக்கப்படுத்தி, அழியும் விளிம்பில் உள்ள அக்கலைகளை மீண்டும் உயிர்பெற உதவிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதையும் நாம் பாராட்டத்தான் செய்கிறோம்).

அதில் வேதனை என்னவென்றால் பெற்றோர்கள் ஒரு பக்கம் தங்கள் குழந்தைகளை சரியாகத் தோணாத பாதையில் இட்டு செல்கிறார்கள் என்றால், அந்த நிகழ்ச்சிக்கு நடுவர்களாக வரும் ஒரு சிலரை சொல்ல வேண்டியதே இல்லை.

நடனம் என்றால் அது ஒரு எல்லைக்குள் தான் வரையறுக்கப் பட்டதால் அதில் பெரிய குறை ஒன்றும் சொல்ல முடியாது. ஆனால், பாடல் என்று வரும்போது அதை சொல்வதற்கே வாய் கூசும், அப்படித்தான். அங்கு நடக்கிறது மேடையில் ஒரு பெண் குழந்தை திரைப்படப் பாடல் ஒன்றை பாடுவதாக உதாரணத்திற்கு வைத்துச் கொள்வோம், அந்த பெண் குழந்தை பாடும் (இரட்டை தொணி) பாடல் எதுவோ அதற்கு ஏற்றாற்போல் அரைகுறை ஆடைகளை அணிந்து கொண்டு பாடும் நேத்து ராத்திரியம்மா? இந்த பாடலை ஒரு வழியாக பாடி முடித்து விட்டது, (இது போன்ற இன்னும் சில.

SEITHI KALAVAI INDIA

பாடல்களையும் சொல்லலாம்.) மேடை பார்வையாளர்கள் நடுவர்கள் உள்பட அனைவரும் தங்கள் கரகோஷங்களை தட்டுகின்றனர். இதில் (அந்த பெண் குழந்தையின் தாய், தந்தை உறவினரும் அடக்கம்) இப்பொழுது! அந்த சில வரிகள் நன்றாக கேட்பதற்கு சுகமாக இருந்தது மீண்டும் ஒரு முறை ஒன்ஸ்மோர் என ஒரு நடுவர் சொல்ல (அந்த வரிகள் மட்டும்) மீண்டும் குழந்தை நேத்து ராத்திரியம்மா என்று பாட அருமையாக இருக்கிறது என்று அந்த நடுவர் சொல்லிட, அடுத்த நடுவர் அவர் பங்களிப்பாக அந்த பெண் குழந்தையைப் பார்த்து பேசுவார் இந்த பாடலில் உள்ள அர்த்தம் உனக்கு தெரிந்ததா? அதற்கு பாடிய பெண் குழந்தை தெரியாது என தலை அசைக்கும் அல்லது சொல்லும் உடனே நடுவர் தெரியாமலேயே இப்படி பாடி இருக்கே! தெரிந்து பாடி இருந்தால், அப்பப்பா ஒன்றும் சொல்ல முடியாது, சபாஷ் இனிமே எதை பாடரதா இருந்தாலும், நல்லா அர்த்தம் தெரிஞ்சு பாடினாதான் அதுக்குள்ளே நீ சுகமா (என்ஜாய் பண்ணி) பயணமாகி பாட முடியும் சரியா? என சொல்ல, புரிந்ததோ, புரியலையோ மென்மை மனம் படைத்த அந்த குழந்தை தசையசைத்து சரி என்று சொல்லும்.

அந்த இசை மேடையில் மூன்று நடுவர்கள் இருந்தால், மூன்றாவது நடுவர் தன் பங்கிற்கு இந்த பாட்டை யார் சூஸ் (தேர்ந்தெடுத்தார்கள்) பண்ணினா? என்று கேட்க அந்த குழந்தை மம்மி என்று எதார்த்தமாய் சொல்லும் உடனே மூன்றாவது நடுவர் அப்படியா? உன்னை விட உங்க மம்மிக்கு (இதுலே) இந்த பாட்டில் ரொம்ப இன்ட்ரஸ்ட் இருக்கும் போலிருக்கு என்று அந்த குழந்தை காட்டிய திசையில் அமர்ந்திருக்கும் தாயை உடனே மேடைக்கு அழைத்து, இந்த பாடலை இரண்டு வரி பாட நடுவர்கள் சொல்ல அந்த பெண்மணியும் ததக்கா, பிதக்கா என்று உளறி கொட்டி வைக்க, மீண்டும் கைதட்டல் அரங்கில் முடிவில் இதுபோன்ற பாடல்களை கேட்கும் போது நமது எண்ணம் எங்கேயோ



செல்கிறது என்று ஒருவித மயக்கம் கலந்த அன்றைய சூழலின் ஏக்கம் வருகிறது என சொல்லி நடுவர் முடிப்பார்.

இதை கேட்டு அந்த பெண் குழந்தையின் தாய் தந்தை, உறவினர்கள் உள்பட அனைவரும் சேர்ந்து தங்கள் கரங்களை தட்டி அரங்கையே அதிர வைப்பார்கள் இவ்விதமாகத்தான் பிஞ்சுக் குழந்தைகளின் நெஞ்சில் நஞ்சை விதைக்கிறார்கள் என்பது தான்



SEITHIKALVAI INDIA

மிகப்பெரிய வேதனை, இதில் மிகப்பெரிய வேடிக்கை (கொடுமை) என்னவென்றால், அந்த நிகழ்விலிருந்து வெளியேறும் சூழ்நிலை வந்தால் அந்த தாய் கண்ணீர் விடும் நிலையைப் பார்த்து குழந்தையும் அழும் கூட வந்த உறவுக்கார கூட்டமும் சேர்ந்து, தங்கள் கண்களையும் துடைத்துக் கொள்வார்கள். என்னமோ இழக்காத ஒரு பொருளை இழந்து விட்டதைப்போல், இதில் அந்த குழந்தையின் தாய் தந்தையை பேசச் சொல்வார்கள் (முடிந்தால்) அதில்



(இதில்) வெற்றி பெற்று செல்வோம் என்றுதான் நினைத்திருந்தோம். அது முடியவில்லை மனதுக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது.

தாய் பேசும் போது இவளோட அப்பாதான் ரொம்ப கவலையாய் இருக்கார். ரிலேஷன் பிரண்ட்ஸ் (உறவினர்கள். நண்பர்கள்) கிட்ட, ஜெயிச்சிட்டுத்தான் வருவோம்னு சொல்லி இருந்தார் என்று சொல்ல, அதற்கு மேடை அறிவிப்பாளர் பெண் அல்லது ஆண் சொல்லுவார்கள், எந்த குறையும் இல்ல நல்லாத்தான் பாடியிருந்தா ஆனா, என்ன சின்ன சின்ன மிஸ்டேக் அவ்வளவுதான் என சொல்லி வைப்பார்கள் கூடவே, அடுத்த தடவை நிச்சயமா வந்து கலந்துகிட்டு கண்டிப்பா இன்னும் நல்ல, நல்ல பாடல்களைப் பாடி அசத்தி நீ ஜெயிக்கனும் சரியா? என்று சொல்லி மீண்டும் ஒரு முறை நேத்து ராத்திரியம்மா பாடலின் ஒரு துண்டு பல்லவியாவது பாட வைத்து கேட்டு விட்டுத்தான் மேடையை விட்டே அனுப்பி வைப்பார்கள்.

இது இப்படி என்றால், எப்படி நல்ல விஷயமாகும்? மகாகவி பாரதி சொன்னான், இனி தமிழ் மெல்ல மெல்ல சாகும் என்று அதுதான் இன்றைக்கும் நடந்து கொண்டிருக்கிறது. அன்னிய மொழியை கொஞ்சம் கொஞ்சமாக புகுத்தி, பேசிக்கொண்டிருப்பதன் வாயிலாக அது நடந்து கொண்டிருக்கிறது.

மம்மி என்ற ஆங்கில வார்த்தையே, தமிழில் பிணம் என்று தானே அர்த்தம் பத்து மாதம் சுமந்து பெற்று தாலாட்டி, சீராட்டி, பாராட்டி படிக்க வைத்து நல்ல பாங்கினை சொல்லிக் கொடுக்கும் தன்னலமற்ற தாயையே ஒரு பிணம் என்று அழைக்கப்படுவதும், ஆனந்திப்பதும் இதை என்னவென்று சொல்வது.

தொடர்ச்சி -26-ம் பக்கம்

SELVAI INDIA

# பெண்பிள்ளைகளை வளர்ப்பதில் தந்தையின் பொறுப்பு



உண்மையில் உங்கள் பருவ வயது (டீன் ஏஜ்) மகளுக்கு அம்மாவை விட அதிகம் தேவை அப்பா தான் உறவு முறைகளிலே அழுத்தமானது தந்தைக்கும், மகளுக்குமுள்ள உறவு தான் என்கிறார்கள் பல அறிஞர்கள், தந்தையின் வழி காட்டுதல் அன்பு, அரவணைப்பு இல்லாததுதான். எல்லாப் பிரச்சனைக்கும் மூல காரணம்.



மிகவும் வயது வந்த மகளுக்கு அப்பா என்பவர் வெறும் ஒரு நபரல்ல, ஒரு நண்பன்! பாதுகாவலன்! ஊக்கமூட்டுபவர்! உற்சாகப் படுத்துபவர்! தன்னம்பிக்கை வளர்ப்பவர்! நம்பிக்கை ஊட்டுபவர்! பண்புகளை ஊட்டுபவர்! வழி காட்டி! என எக்கச்சக்க முகங்கள் அவருக்கு இருக்க வேண்டும், ஒரு பெண் முதல் சந்திக்கும் ஆண் அவளுடைய அப்பா தானே அப்பாவிடமிருந்து தான் அவள் ஒரு ஆணுக்குரிய இலக்கணங்களைக் கற்றுக் கொள்கிறார் ஆண் என்பவரின் குணாதிசயங்களை கற்றுக் கொள்கிறாள், ஆண் என்பவரின் தேவையை கண்டு கொள்கிறாள். எனவே மகள் மழலையாய் இருக்கும் போதே எல்லா வகையிலும் முன்மாதிரியானவராய் வாழ வேண்டியது அப்பாவின் கடமையாகிறது.

சின்ன வயதில் மழலையாய் சிரித்துச் சிணுங்குகையில் அழகாய் ஆடைகள் வாங்கி கொடுப்பதில் ரொம்பவே ஈடுபாடு காட்டுவீர்கள் தேடித்தேடி வாங்குவீர்கள் மகளும் ரொம்பவே சமர்த்தாய் உங்கள் கழுத்தைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தம் தருவாள். வாழ்க்கை எல்லாவற்றையும் திடீரென மாற்றிவிடும்.

ஒரு நாள் பார்த்தால், சட்டென்று வளர்ந்து நிற்பாள் என் டாடி சூப்பர் என்று சொல்லிக் கொண்டிருந்தவள், டாடிக்கு ஒன்னும் தெரியாது என்று பல்டி அடிப்பாள் எல்லாவற்றிற்கும் காரணம் அவளுடைய உடல் மனமாற்றங்கள் தான், என் பொண்ணுக்கு என்னைக் கண்டாலே புடிக்கல. அவளுக்கு நான் இனிமே தேவையில்லை என்றெல்லாம் புலம்பாதீர்கள் ஒன்றை நினைவில் கொள்ளுங்கள்! உங்கள் மகள் உங்கள்

மகள் தான் அவளுக்கு உங்கள் மீதான பாசமும் அன்பும் கனிவும் எப்போதுமே நிரம்பி இருக்கும் ஆனால், அவளின் வெளிப்படுத்தும் விதத்தில் தான் மாற்றங்கள் டாடி பிளீஸ்... டாடி... வாங்கிக் கொடுங்க டாடி... என்று சின்ன வயதில் கெஞ்சிய மகள் டாடி... எனக்கு இது வேணும் முடியுமா? முடியாதா? என பிடிவாதம் பிடிப்பாள், உடனே நீங்கள் பதட்டப்படுவீர்கள் ஆனால், உண்மையில் அவள் உங்களுடைய அனுமதியை எதிர்ப்பார்த்து நிற்கிறாள். அப்பாவின் அனுமதி இருந்தால் தான் அவளுக்கு அதில் ஒரு ஆத்ம திருப்தி, நீங்கபாட்டுக்கு எல்லாவற்றையும் சகட்டு மேனிக்கு நிராகரித்து தள்ளாதீர்கள். நல்லதுன்னா அப்பா ஒத்துப்பார் என்னும் நிலைமைதான் இருக்க வேண்டுமே தவிர, அவர் கிட்ட என்ன சொன்னாலும் வேலைக்காகாது. என்ற நிலைக்கு வந்து விடக் கூடாது,



நீங்கள் பேசுவதை விட மிக மிக அதிகமாய் மகள் பேசுவதை கேட்க வேண்டும் அது தான் முக்கியம். ஒன்றை நினைவில் கொள்ளுங்கள் என் அப்பா டெக்னாலஜியில் என்னைப் போலவே ஹைடெக் எனக் கருதுவதில் உங்கள் மகளுக்கு இருக்கும் மகிழ்ச்சி அலாதியானது. நீங்கள் அந்த டெக்னாலஜி உலகுக்குள் நுழைந்தால் தான் அதிலுள்ள நன்மை தீமைகளை நாசூக்காக உங்கள் மகளுக்கு சொல்ல முடியும். இன்னொரு விஷயம் உங்கள் மகள் பருவத்துக்குரிய வனப்புடன் வளர்கிறாள் என்றதும் தள்ளியே நிற்காதீர்கள், அது மனதளவில் உங்கள் டீன் ஏஜ் மகளைப் பாதிக்கும் என்கின்றனர் உளவியலாளர்கள், உங்கள் மகளின் தோளை தட்டி பாராட்டுவதோ தலையைக் கோதிப் பாராட்டுவதோ, செல்லமாய் அரவணைத்துக் கொள்ளுதலோ அவளுக்கு ரொம்பவே தேவை.

அடிக்கடி வெளியே கூட்டிப்போங்கள் ஐஸ்கிரீம் பார்லர் போன்ற இடங்களுக்கு ஜாலியாய் போய் வாருங்கள் மகளுடன் நிறைய நேரம் செலவிடுங்கள் நிறைய நேரத்தை நீங்கள் அவளுடன் செலவிடும் போது, அவளுக்கு இயல்பான உரையாடல் சாத்தியப்படுகிறது. நினைத்ததை எப்படியேனும் வெளிப்படுத்தி விடுவாள்.

அவள் பள்ளியில் கல்லூரியில் ஏதேனும் விழா நடக்கிறது என்றால் அதை தவற விடாதீர்கள்.

வெறுமனே நீங்கள் அவளுடன் இருந்தால் போதும் அவள் உங்களை ரொம்பவே கொண்டாடுவாள் நீங்கள் அவளை அன்பு செய்கிறீர்கள் சரி, மதிக்கிறீர்கள் சரி ஆனால், அதை அவளிடம் வெளிப்படையாக சொல்லி

இருக்கிறீர்களா? இல்லையேல் அதைச் முதலில் சொல்லுங்கள், பருவவயது மனது எதிலும் வெளிப்படையாக இருக்க விரும்பும் சுற்றி வளைத்து எதையும் பேசாமல், உங்கள் மகளை நீங்கள் மதிக்கிறீர்கள் அன்பு செய்கிறீர்கள் என்பதைச் சொல்லி விடுங்கள்.

பருவ வயது மகளின் தினசரிகள் பல்வேறு அனுபவங்களால் நிரம்பி வழியும் ஆனந்தம், கவலை, எரிச்சல், சோகம் என எக்கச்சக்க உணர்வுகள் நிரம்பி வழியும் சக தோழிகளின் கிண்டல், படிப்பு, அழகு என கண்டதுக்கும் கவலைப்படும் வயது அது. அதை முதலில் நீங்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். எதுவானாலும் கவலையில்லை அப்பா இருக்கிறார் எனும் நம்பிக்கையை நீங்கள் உங்கள் மகளிடம் ஊட்ட முடிந்தால், அதைவிட பெரிய விஷயம் ஏதும் இல்லை அதற்கு மகளிடம் உண்மையாய் இருக்க வேண்டியது உலக மகா தேவை!

எந்தக் காரணம் கொண்டும் அவளைத் திட்டாதீர்கள். அவள் என்ன தான் மிகப் பெரிய தவறு செய்திருந்தாலும் சரி, உணர்ச்சி வசப்படாதீர்கள் பிரச்சினைகள், விளைவுகள், தீர்வுகள், என சிந்தியுங்கள், நீங்கள் பதட்டப்பட்டு உங்கள் கோபத்தையும், ஆத்திரத்தையும் மகளிடம் காட்டி விட்டால் போச்சு அது வீட்டைப் பூட்டி சாவியை தூர எரிவதற்கு சமம், உங்கள் மகள் அதன்



பின் எதையும் பேசுவாள் என்று சொல்வதற்கு இல்லை.

எப்போதும் அவளிடம் தோழமை உணர்வுடன் பழகுங்கள் அடிக்கடி உங்கள் மூடு மாறாமல் இருக்க வேண்டியது ரொம்ப முக்கியம், அப்பா எப்போது அமைதியாக இருப்பாரு, எப்போ எரிஞ்சி விழுவாருன்னு தெரியாது எனும் நிலை வந்தால் சிக்கல் தான். படிப்பு, நட்பு எல்லாவற்றிலும் உங்கள் அளவான ஈடுபாடு இருக்கட்டும். அவளுக்கு இதெல்லாம் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை என்று மட்டும் நினைக்காதீர்கள்

குறிப்பாக ஆண்களைப் பற்றியும், ஆண்களின் குணாதிசயங்கள் சிந்தனைகள், எதிர்பார்ப்புகள் போன்றவற்றை பற்றியும், அவளுக்கு புரியும் வகையில் அவ்வப்போது சொல்வது அவசியம். வெளுத்தது எல்லாம் பாலல்ல என்பதை அவள் தெரிந்து கொள்ள வேண்டும்,

சமூகம் சார்ந்த பல அறிதல்களையும் அப்பா தான் சொல்லிதர வேண்டும், ஒரு ஆச்சரியமான உண்மை

SEITHI KALAVAI INDIA

என்னவென்றால், பத்து வயதுத் தொடக்கத்தில் இருக்கும் மனோபாவம் நாள் செல்லச், செல்ல பக்குவப்படும், திருமணம் வயது வரும்போது அப்பா தான் உலகம் எனும் நிலைக்குப் பெண்கள் வந்து விடுவார்கள். அதுவரை சலிக்காத வழிகாட்டுதலும், பொறுமையான அணுகு முறையும், நிபந்தனையற்ற அன்பும் நீங்கள் காட்ட வேண்டியது அவசியம்.

சின்ன வயதிருந்தே தந்தையின் வழிகாட்டுதலிலும். அன்பிலும் வளரும் குழந்தைகள் நல்ல வளர்ச்சி அடையும் என்கிறார் எழுத்தாளரும் மருத்துவருமான ''மெக் மீக்கர் ஸ்ட்ராங்'' பாதர் ஸ்ட்ராங் டாட்டர்ஸ் எனும் நூல் அப்பாவின் வழி காட்டுதலே டீன் ஏஜ் பெண்களுக்கு மிகமிகத் தேவை என்கிறார். என் பொண்ணோட வாழ்க்கையில் மிக முக்கியமான நபர் நான் தான் என்னும் எண்ணம் அப்பாக்களுக்கு வர வேண்டியது தான் முதல் தேவை என்கிறார் இவர்.

என் அப்பாவை போல நல்ல ஓர் ஆண், எனக்கு கணவனாக வர வேண்டும் என உங்கள் மகள் நினைக்க வேண்டும். அப்படி நடந்தால் நீங்கள் ஒரு நல்ல அப்பாவாக வெற்றி பெற்று விட்டீர்கள் என்று பொருள்.

**மகள்களை பெற்ற அப்பாக்களுக்கு விட்டுக்கொடுத்து வாழ்ந்து பாருங்கள். சொர்க்கம் பூமியிலேயே இருக்கிறது என்று பரிபூரணமாக உணர்வீர்கள்.**

V. சிவக்குமார்

SEITHI KALAVAI



செல்லத்தைக்
கையில் எடுத்து
கொஞ்சுவீங்களாக்கும்!


## செய்திக் கலவை

மாத இதழ்

**பதிவு அலுவலகம் :**
53, வ.உ.சி. காலனி, சிட்கோ அஞ்சல்,
கோயம்புத்தூர் 641 021

இதழ் வளர்ச்சியில் உறுதுணை :
குற்றவியல் வழக்கறிஞர் முனைவர்
**ஐயா ஏ.பி.ஜெயச்சந்திரன்**
M.A., (Crimin), M.Phil (Police Admin),
Ph.D (Law), MSW, LLB, DLLAL, DCACJ., DHRD .,M.Sc.,(PSY)

வெளியிடுபவர், ஆசிரியர் :
**S.R. பாரதிராஜா**
செல் : 98946 09748, 94874 09748



V. **சிவக்குமார்** B.A. துணை ஆசிரியர்
M. **ஷாஜஹான்** B.Sc உதவி ஆசிரியர்
A. **சக்திவேல்** MBA உதவி ஆசிரியர்
P. **ஜோதிமணி** ECE செய்தி ஆசிரியர்
P. **ரமேஷ்கண்ணன்** முதன்மை தலைமை நிருபர்
G. **பாலாஜி** B.Sc., IT, M.S (Networking Australia) கணணி நிருபர்
L. **சண்முகசுந்தரம்** தலைமை புகைப்பட நிருபர்
I. **இந்திரகுமார்** சென்னை மாவட்ட நிருபர்
V. **ராஜ்மோகன்** M.A கோவை மாவட்ட நிருபர்
A. **பாண்டியம்மாள்** BBA திண்டுக்கல் மாவட்ட நிருபர்
C. **கஜேந்திரன்** IT ஈரோடு மாவட்ட நிருபர்
S. **சோமசுந்தரம்** M.A திருப்பூர் மாவட்ட நிருபர்
K. **கீதாஞ்சலி** காஞ்சிபுரம் வடக்குபகுதி மாவட்ட நிருபர்
S.S. **ஜானகிராமன்** கோவை கிழக்கு பகுதி மாவட்ட நிருபர்
M. **ரமேஷ்முருகன்** M.S. Ph.D கோவை தெற்கு பகுதி மாவட்ட நிருபர்
S. **பிரபாகரன்** கோவை மாநகர் நிருபர்
P. **தங்கதுரைபாண்டி** IMA ஆலோசகர்

**நிருபர்கள்**

S. **கருணாகரன்** B.A J. **வர்க்கீஸ்வனத்தையன்** B.A
K. **கோவிந்தராஜ்** M. **சவுந்தரராஜன்** DMT (PT)
S. **ராணி** **வசந்தகுமாரி** S.R. **வைஷ்ணவி**
R. **தமிழ்செல்வன்** B. **திருநாவுக்கரசு**
G. **தேவேந்திரன்** K. **மஞ்சுளாதேவி**
R. **அந்தோணி** M.A
திண்டுக்கல் புகைப்படகலைஞர் நிருபர்



தகவல் பரிமாற்றத்திற்கு
E-mail: editorseithikalavai@gmail.com | www.seithikalavai.com



கட்டுரைகளில் இடம்பெறும் கருத்துக்களுக்கு கட்டுரை யாளர்களே பொறுப்பு. புலனாய்வுச் செய்திகளை இயன்ற வரை தீவிர விசாரணைக்குப் பின்னரே அச்சிலேற்று கிறோம். சில சமயங்களில் சம்பந்தப்பட்டவர்களே அவர்கள் மீதான செய்திகளுக்கு உரிய பதில் அளிப்ப தில்லை. எனவே, வெளியாகும் செய்திகளில், சம்பந்தப் பட்டவர்களுக்குக் கருத்துபேதம் இருந்தால், அது குறித்து அவர்கள் தரப்பு விளக்கத்தை அளிக்கலாம். விளம்பரங் களின் உண்மைத் தன்மைக்கு அவர்களே பொறுப்பு. கட்டுரைகள், செய்திகளைச் சுருக்கி வெளியிட ஆசிரியருக்கு உரிமை உண்டு.

ALL RIGHTS RESERVED LEGAL JURISDICTION COIMBATORE CITY COURTS ONLY. NOTHING IN 'SEITHI KALAVAI' MONTHLY IS INTENDED TO DEFAME ANY PERSON, BUT EXPRESSED IN GOOD FAITH, PURSUIT OF TRUTH AND PUBLIC GOOD.

21- பக்கம் தொடர்ச்சி

உலகில் உள்ள மேலை நாடுகளிலெல்லாம் வாழும் நம் (உறவு), தமிழர்கள் தங்களின் குழந்தைகள் தாய்த் தமிழை எங்கே மறந்து விடுவார்களோ என்று அஞ்சி-தமிழகத்திலிருந்து தமிழ் பாடல்கள் மற்றும் தரமான தமிழ்த்திரைப்படங்கள் வெளி வந்தவுடன் அதை உடனே வாங்கி வாரவிடுமுறை நாட்களில் தங்கள் இல்ல சிறிய திரையில் அனைவரும் ஒன்றாக அமர்ந்து, பார்ப்பதுடன் தங்கள் குழந்தைகள் தமிழ் வார்த்தைகளை பற்றி கேட்க்கும் எந்த சந்தேகங்களுக்கும் உடனே விடையும் சொல்கின்றனர்.

இவ்விதமாக கடல் கடந்து வாழும் தமிழினம் கூட தாய் தமிழைச்சாக விடாமல் காப்பாற்ற போராடிக் கொண்டு இருக்கும். இந்த வேளையில் மொழிக்கெல்லாம் முதல் மொழியாம் தாய்த்தமிழ்மொழியை காப்பாற்றவும். நமது மழலைச் செல்வங்களுக்கு தமிழ் குலம் செழிக்க ஐயன் திருவள்ளுவர் எழுதிய குறள் போல் எண்ணற்ற தூய வரிகளில் உள்ள உண்ணத விசயங்களைச் சொல்லித்தர வேண்டியது பெற்றோர்களின் கடமை. இனியாவது தங்கள் குழந்தை களுக்கு நல்லதையே சொல்லிக் கொடுங்கள், நீங்களும் அதன்படி செயல்படுங்கள்

பண்படாத நாகரீகம் பகட்டான (பொய்யான) வாழ்க்கை என வாழாமல், நம் முன்னோர்கள் சொல்லிச் சென்ற நற்பண்புகளை பேணிக் காப்போம் அதோடு மழலைச் செல்வங்களுக்குள் திறமையை வளர்த்துக் கொள்ள, அதை



வெளிக்கொணர நேர்மையாக, உண்மையாக, உளமாற செயல்படும் சேனல்களை (தொலைக்காட்சிகளை) தேர்ந்தெடுங்கள் நவரசங்கள் நிறைந்த தூயத்தமிழ் பாடல்களை சொல்லித் தாருங்கள் அப்பொழுதுதான் அவர்களும் ஏறுநடையில் வீறுகொண்டு தாய் தமிழ் மொழியைத் தன்னுள் தக்க வைத்து கொண்டு வாழ்வார்கள். நாமும் நமது எதிர்கால சந்ததியற்கு நம் பாரத தேச பண்பாட்டையும் சேர்த்தே கற்றுக்கொடுப்போம். பெற்றோர்களே இனியாவது சிந்தியுங்கள் சீர் படுத்துங்கள் தமிழகத்தின் தலை எழுத்தும் நம் பாரத நாட்டின் எதிர்காலமும் உங்கள் கரங்களை நம்பித்தான் தவழ்கிறது என்பதை ஒருபோதும் மறந்து விடாதீர்கள்.

P. ஜோதிமணி


## வாசகர்களின் கவனத்திற்கு

### செய்திக் கலவை

மாத இதழுக்குச் செய்திகள் அனுப்புவோர் வெள்ளைத் தாளில் ஒருபக்கம் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும். செய்திக்கு உரிய புகைப்படங்கள் இருப்பின் அவற்றின் பின்பக்கம் சம்பந்தப் பட்டவர்களின் பெயர்களைக் கண்டிப்பாகக் குறிப்பிட்டு எழுத வேண்டும். தேவை ஏற்படின் தங்களைப் பற்றிய விவரம் பாதுகாக்கப்படும். செய்திகளைச் சுருக்கவும், திருத்தம் செய்யவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. செய்திகளைப் பிரதி மாதம் 15 ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

தொடர்புக்கு:98946 09748




SEITHI KALAVAI INDIA



# யார் ? இந்த...

# திருநாவுக்கரசு



அஸ்வந்ராஜ் உதவும் உள்ளம் என்ற பெயரில் கோவை மாநகரம் முழுவதும் உள்ள சில ஏழை எளிய ஆதரவற்றோர்களுக்கு உணவு குடிதண்ணீருடன் அன்பும், அரவணைப்பும் கொடுத்து வருபவர்தான் திருநாவுக்கரசு இரவு நேரங்களில் ஆதரவற்ற நிலையில் இருக்கும் நோயாளிகளுக்கு உணவு கொடுப்பதோடு மட்டுமல்லாமல், அவ்வப்போது ஊன்றுகோல் வழங்கியும், நலிந்த குடும்பத்தாருக்கு தேவைப்படும் அரிசி, பருப்பு மற்றும் காய்கறி மளிகை பொருள்களும் ஒருவாரம் தாங்கும் அளவிற்கு கொடுத்து அவர்களின் ஏகோபித்த அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெற்று வருபவர்தான் திருநாவுக்கரசு.

இவர் சுண்டக்காமுத்தூரில் ஒரு சிறிய தேனீர் கடைதான் வைத்து வாழ்ந்து வருகிறார். ஏழ்மைநிலையிலிருந்து படிக்கும் பள்ளி சிறார்களுக்கு தேவையான நோட் புத்தகம், தோல்பை, செருப்பு, ஆடைகள் இவைகளையும் இன்முகத்தோடு செய்து வரும் திருநாவுக்கரசு, தன் சம்பாத்தியத்தில் பாதிதொகை ஒதுக்குவதோடு, நண்பர்கள் மூலம் நிதிகளையும் பெற்று, மனச்சோர்வின்றி தொடர்ந்து உதவிகளை இதுநாள் வரையில் செய்து வருகிறார். அந்த மக்களிடம் நன்மதிப்பை பெற்று மனமகிழ்வுடன் வாழ்கிறார் என்றால், அது மிகையாகாது. இவரது சேவை தொடர்ந்திட நாமும் வாழ்த்துவோம். இவருக்கு உறுதுணையாக ஹரிபிரசாத், கார்த்தி, லிடியா, அருண்குமார் ஆகிய நண்பர்கள் இருப்பதும் குறிப்பிடதக்கது.

## பெற்ற விருதுகள்



பாண்டிச்சேரி பொதிகை நியூஸ் சார்பில் தமிழிசை சௌந்தராஜன் அவர்கள் கலந்து கொண்டு வழங்கப்பட்ட சமூக ஆர்வலர் விருதும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.



அறம் செய்ய விரும்பு அறக்கட்டளை சார்பாக, சமூக சிந்தனையாளர் என்ற விருது இயக்குனரும் பத்திரிக்கை ஆசிரியருமான பாக்கியராஜ் கரங்களில் பெறப்பட்டது.



நிறைவாழ்வு முதியோர்கள் இல்லத்தின் சார்பாக, சமூக ஆர்வலர் செங்கோல் விருது திரைப்பட இயக்குனர் பேரரசு கரங்களில் பெறப்பட்டது.

G. பாலாஜி





# மதுரை மீனாட்சி அம்மன் கோயில்

பல ஆண்டுகளுக்கு முன்னால் மாலிக்காபூர் என்னும் மன்னன் மதுரையை நோக்கி படையெடுத்தான். வரும் வழியெல்லாம் இரத்தம், கொலை, கொள்ளை பலாத்காரம் . பெண்களை சிறைப்படுத்துதல் என நிறுத்தாமல் தொடர்ந்து நடத்தி கொண்டிருந்தான். கோவில்களையும் விட்டுவைக்கவில்லை இடித்தான். முடியாதவற்றில் மூர்த்தியை (மூலவிக்ரம்) மட்டுமாவது இடிப்பான். பல கோவில்களின் மூர்த்தியை எப்படியாவது காப்பாற்றி விடுவார்கள் நம் மக்கள். இப்படியாக தொடங்கியது தான் கல்திரை கர்ப்ப கிரகத்திற்கு முன்னால் ஒரு சுவரை எழுப்பி அதற்கு முன் ஒரு மூர்த்தியை பிரதிஷ்டை செய்துவிடுவார்கள். ஆக்கிரமிப்பாளன் வருவான் இது தான் மூர்த்தி என்று நினைத்து இடிப்பான் இதை கேள்விப்பட்டனர் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலைச் சேர்ந்த ஐந்து சிவாச்சியார்கள். எப்படியாவது நமது கோவிலை காப்பற்ற வேண்டும். சுவாமி மீது ஒரு மினேச்சன் கை வைக்கக்கூடாது என்று தங்களுக்குள் சபதம் செய்து கொண்டார்கள்.

தாம் செய்யும் காரியத்தை நேரம் வரும் வரை யாருக்கும் சொல்வதில்லை என்று தங்களுக்குள் சத்தியம் செய்துகொண்டபின் சுவாமிக்கு அபிஷேகம் எல்லாம் செய்து முடித்து கண்ணில் நீருடன் மீண்டும் உன்னை எப்போது காண்போம் சர்வேஸ்வரா சுந்தரேசே என்று கதறியபடியே கல்திரை எழுப்பினார்கள் வெளியே மூர்த்தியை பிரதிஷ்டை செய்தார்கள். அசலைப் போலவே நகை, விளக்கு, மாலை எல்லாம் ஏற்பாடு செய்தார்கள். வந்தான் மாலிக்கபூர். ஆயிரக்கணக்கான பேரைக் கொன்றான். பல ஆயிரம் பேரை மதம் மாற்றினான். மாட்டுக் கறியை வாயில் திணித்தான். விக்கிரகத்தை இடித்தான். செல்வங்களை எல்லாம் கொள்ளையடித்து கொண்டு போனான். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலே 48 ஆண்டுகள் பூஜை கிடையாது. அது பாழாக கிடந்தது. அதன்பின் விஜயநகர சாம்ராஜ்யம் துவங்கியது. எல்லா கோவில்களையும் புனருத்தாரணம் செய்தார்கள். அப்போது, மதுரை மீனாட்சி கோவிலும் வேலையை ஆரம்பித்தார்கள். அங்கே இடிந்து கிடந்தது சிவலிங்கம் அம்பாளைக் காணோம். சரி வேறு ஒரு சிலையை செய்யச் சொல்லி உத்தரவு கொடுப்போம் என்று சொன்னார்கள்.

அப்போது தள்ளாத வயதான ஒர சிவாச்சாரியார் வந்தார். புது விக்ரகமெல்லாம் வேண்டாம். சுவாமி பத்திரமாக இருக்கிறார் என்றார். என்ன சொல்கிறீர்கள். இதோ இடித்து விட்டு போயிருக்கிறார்களே என்றனர். இல்லை, இல்லை இது மூல விக்கிரகமில்லை என்றதோடு, நடந்ததைச் சொன்னார். (சத்தியம் செய்த ஐந்து பேரில் நான்கு பேர் ஏற்கனவே இறந்து விட்டனர். காலம் வரும் வரை எப்படியாவது நான் இதை சொல்லிவிட்டுச் சாக வேண்டும் என்று உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருக்கிறேன். என்று சொல்லிவிட்டு தாளாத துக்கத்துடன் மனதில் இருந்த பாரம் இறங்கியதில் நல்லது நடக்கிறதே என்ற சந்தோஷத்துடன் அழுதுகொண்டே நின்றார். உடனடியாக அந்த மூர்த்தி இருந்த இடத்தின் பின்னே உள்ள சுவற்றை இடிக்க ஆரம்பித்தார்கள். முழுவதும் இடித்து உள்ளே சென்று பார்த்தால் உள்ளே 48 ஆண்டுகள் கழித்து எந்த பூஜையும் இல்லாமல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சுவாமியின் மீது சாற்றிய சந்தன கலபம் ஈரமாக இருந்தது. பூக்கள் வாடாமல் இருந்தன. கர்ப்ப கிரகத்தில் உள்ளே இருந்து வரும் அந்த வாசமும் அப்படியே இருந்தது.

48 ஆண்டுகள் கழித்து எந்த பூஜையும் இல்லாத நிலையில் உள்ளே அனைத்தும் மூடும்போது இருந்தபடியே இருந்தது. அனைவரும் பக்தியில் திளைத்தனர். அனைத்து சோக நிழல்களும் பறந்தன. ஊரே திருவிழாக் கோலம் பூண்டது. மீண்டும் புதுப்பொலிவுடன் கோவில் திறக்கப்பட்டது. இன்றும், அந்த கோவிலுக்குப் போனால், உடைக்கப்பட்ட சிவலிங்கம் ஒரு ஓரமாக துர்க்கை அம்மன் எதிரில் வைக்கப்பட்டுள்ளது. இந்த விவரம் ஒரு பலகையில் எழுதி வைக்கப்பட்டுள்ளது. அதை யாரும் பார்ப்பதில்லை. அடுத்து தடவை மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு போவீர்களானால் கட்டாயமாக அதைப் பாருங்கள்.

P.R. கண்ணன்

SEITHI KALAVAI INDIA



ராணி-யின்

# சுவையான சமையல்

## உருளைக்கிழங்கு ரசகுல்லா



**தேவையான பொருட்கள் :**

| | | |
|---|---|---|
| உருளைக்கிழங்கு | : | 1/4 கிலோ |
| எண்ணெய் | : | 1/4 லிட்டர் |
| சர்க்கரை | : | 1/4 கிலோ |
| பால் | : | 1 லிட்டர் |
| மைதா மாவு | : | 100 கிராம் |
| தேங்காய் துருவல் | : | 1/4 கப் |
| கேசரி பவுடர் | : | 1/4 ஸ்பூன் |

**செய்முறை :** உருளைக்கிழங்கை தோல் சீவி, சிறு துண்டுகளாக நறுக்கி, பாலில் நன்கு வேக வைக்கவும். கிழங்கு ஆறிய பிறகு, மிக்ஸியில் போட்டு விழுதாக அரைக்கவும். விழுதுடன் மைதா மாவு சேர்த்து பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக உருட்டி வைக்கவும். பிறகு ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றி, அடுப்பைப் பற்ற வைத்த சிறு தீயில் உருண்டைகளை பொன்னிறமாக பொறித் தெடுக்கவும். மற்றொரு பாத்திரத்தில் சிறிது தண்ணீர் ஊற்றி சர்க்கரை சேர்த்து பாகு காய்ச்சவும். கம்பி பதம் வந்தவுடன், அடுப்பை நிறுத்தி விட்டு பொரித்த உருண்டைகளை பாகில் சேர்க்கவும். அதனுடன் கலர் சேர்க்கவும் கடைசியாக தேங்காய் துருவலை லேசாக வறுத்து பாகின் மேல் தூவவும். (தேவைப்பட்டால் முந்திரி, பாதாம், பிஸ்தா, ஏலக்காய் பொடித்து மேலே தூவலாம்). இது சாப்பிட சுவையாக இருக்கும்.

**உருளைக்கிழங்கு ரசகுல்லா ரெடி.**

## காய்கறி ஜாம்



**தேவையான பொருட்கள் :**

| | | |
|---|---|---|
| கேரட் | : | 100 கிராம் |
| பீட்ரூட் | : | 100 கிராம் |
| உருளைக்கிழங்கு | : | 100 கிராம் |
| சௌசௌ | : | 100 கிராம் |
| சர்க்கரை | : | 1/4 கிலோ |
| ஏலக்காய் | : | 5 |
| நெய் | : | 100 கிராம் |

**செய்முறை :** முதலில் காய்களை நன்றாக சுத்தம் செய்து சிறு துண்டுகளாக நறுக்கவும். பிறகு அடுப்பைப் பற்ற வைத்து, ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து நறுக்கிய காய்களை அதில் போட்டு தேவையான அளவு தண்ணீர் ஊற்றி, குழைய வேக வைக்கவும். வெந்த காய்களை மிக்ஸியில் அடித்து, ஒரு பாத்திரத்தில் ஊற்றி, சர்க்கரை சேர்த்து நன்றாக கிளறிக் கொண்டே இருக்கவும். பின் சிறிது நெய் விட்டு கிளறவும். பின் ஏலக்காயைப் பொடித்து சேர்க்கவும் . கெட்டிப் பதம் வந்தவுடன் அடுப்பை அணைத்து விடவும். சப்பாத்தி, பிரட், தோசையுடன் தொட்டுச் சாப்பிட நன்றாக இருக்கும்.

**காய்கறி ஜாம் ரெடி.**

SEITHI KALAVAI INDIA



# சிரித்தால் இன்பமயம்



**ரமேஷ்** : வாஸ்து பார்ப்பவரை கூட்டி வந்து வீட்டை காண்பித்தது தப்பாப் போச்சு

**சுரேஷ்** : ஏன் என்னாச்சு?

**ரமேஷ்** : நடுஹால்ல பீரோவை படுக்கச் வைச்சு இரவு அது மேலே படுக்கச் சொல்றாருப்பா

**சுரேஷ்** : எதுக்கு அப்படி சொன்னாரு?

**ரமேஷ்** : அப்பத்தான் வீட்ல எல்லாமே தங்குமாமா இதுல என் பொண்டாட்டி வேற நகை, நட்டுகளை பாதுகாக்க அதுதான் சரின்னு சொல்றா.

---

**முத்து** : வாழ்க்கையில் நான் இப்ப வரைக்கும் ரொம்ப அடிபட்டுட்டுதான் இருக்கேன் சார்

**மணி** : நான் நம்பரேன் சார் உங்க மனைவியை பார்த்தாலே முரட்டுத் தனமாத்தான் இருக்காங்க.

**முத்து** : ?.. .?...

---

**ஒருவர்** : எங்க வீடு கோயில் மாதிரி

**மற்றொருவர்** : அதனால வீட்டு வாசல்ல உண்டியல் வச்சு வசூல் பண்றதெல்லாம் நல்லால்லீங்க.

**பேரன்** : பாட்டி நான் ஓட்டப் பந்தயத்துல கலந்துக்கப் போறேன், நான் ஜெயிக்கனுமுன்னு ஆசீர்வாதம் பண்ணுங்க

**பாட்டி** : நல்லா மகராசனா இருப்பா, ஆனா ஒன்னு, பாத்து மெதுவா ஓடுப்பா கைய, கால ஒடிச்சுக்கப் போற

**பேரன்** : !!!

---

**ராமு** : என்னப்பா சோமு, இந்த கதை ஆசிரியர் கிணத்துக்குள்ள போய் தான் கதை எழுதவேன்னு அடம்பிடிக்கராரு

**சோமு** : அப்பத்தான் கதை ஆழமாய் போகும்மாப்பா...

**ராமு** : ???

---

**கருப்பு** : என்னடா திடீர்னு இந்த பக்கம் வந்திருக்க?

**காத்து** : என் மகன் மனித குரங்கை பார்க்கனும்னு அடம்பிடிச்சான் அதுதான் உன்ன பார்க்க வந்தேன்.

**கருப்பு** : ஙே... ....

S.S. ஜானகிராமன்

**The Registrar of Newspapers for India TNTAM/64745/2015**
**Owned and Published by S.R. BARATHIRAJA** from 53, V.O.C. Colony, SIDCO Post, Near L.I.C. Colony, Coimbatore - 641 021 and Printed by P. Manoharan at Suriya Offset Printers, D.No. 64, 8th Street, Cross Cut Road, Gandhipuram, Coimbatore - 641 012.
**Editor : S.R. BARATHIRAJA Cell : 98946 09748, 94874 09748**

SEITHI KALAI INDIA

# வருந்துகிறோம்



மூத்த பத்திரிக்கையாளரும், செய்திகலவை இதழில்
ஒரு அங்கமாகவும், திகழ்ந்த அருமை நண்பர்

**பண்டிட் K.S. கிருஷ்ண மூர்த்தி M.A.**

(திருப்பூர் மாவட்ட தலைமை நிருபர்)

மறைவுக்கு

**அஞ்சலி செலுத்தி வணங்குகின்றோம்.**

செய்திகலவை இதழ் குழுமத்தார்

SEITHIKALAVAI – MONTYLY The Registrar of Newspapers for the India TNTAM/64745/2015

# மகாகவி பாரதியாரின் 141- வது பிறந்தநாள்



சுதந்திர தாகத்தை ஊட்டிய முண்டாசு கவிஞனே
நம் தேசத்தில் வாழும் ஒவ்வொருவர் மனதிலும் மட்டுமல்ல,
உலகெங்கும் வாழும் மனிதர்கள்பால் என்றும் வாழ்வாய்
இன்னாளில் நினைவு கூர்ந்து வணங்குகின்றோம்.

இவன்
தேச நலன் காப்போர்




E-mail: editorseithikalavai@gmail.com
www.seithikalavai.com